[1983 மார்ச் 7

சிவகாசியில் தொழிலாளர் நல மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 308—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல மருத்துவமனை எப்போது துவங்கப்படும் ?

(ஆ) அதற்கான மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எந்த ஆண்டில் மருத்துவமனை கட்டி முடிக்கப்படும் ?

(ஈ) பூர்வாங்க வேலைகள் உடன் துவங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ—இ) 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை ஒன்று கட்டுவதற்காக சிவகாசி அருகில் சாத்தூர் வட்டம் அணையூர் கிராமத்தில் 2.90 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி, பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது, பொதுப்பணித் துறை மருத்துவமனை கட்டிடம் கட்ட 83.765 லட்ச ரூபாய்க் காக மதிப்பீடும் பணியாளர் குடியிருப்பு சலவை நிலையம், மிதி வண்டி நிறுத்துமிடம் முதலியவற்றிற்காக 41.30 லட்ச ரூபாய்க் கான மதிப்பீடும் அனுப்பியுள்ளது. இந்த இரண்டு மதிப்பீடுகளும் புது டில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கின்றன. அக்கழகத்தின் ஒப்புதல் கிடைத்தவுடன் கட்டுமான பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கூடிய விரைவில் கட்டிடங்கள் முடிக்கப் படும்.

தூத்துக்குடி நகருக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

* வினா எண். 309—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகரத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1983 மார்ச் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ரூ. 119.00 லட்சம் மதிப்பீட்டில் தூத்துக்குடி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்து, இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு 23—9—81-ல் முதல் முன்னோடியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரம் சமீபகாலத்தில் மிக வளர்ச்சி அடைந்துக் கொண்டிருக்கிறது. இப்போது குடிதண்ணீருக்கு மிக தட்டுப்பாடான நிலைமை அங்கே இருப்பதால், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த 119 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் குடிதண்ணீர் அளிக்கப்படும் திட்டம் எங்கேயிருந்து கொண்டு வரப்படுகிறது? வல்லநாடு என்ற பகுதியிலேயிருந்துதான் இது வரையில் அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அங்கேயிருந்துதான் தற்போதும் தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுகிறதா அல்லது வேறு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரிவான திட்டமாக ஏற்பாடு செய்து ஒரு 7 அம்சம் கொண்ட திட்டமாக விரிவு செய்திருக்கிறார்கள். இது போதாது என்று கருதி இந்த நகரில் இதுவரையில் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருக்கும் தெருக்களுக்கு குழாய்கள் அமைக்கவும் அதன்படி கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நகரில் அமைப்பது பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : தலைவர் அவர்களே, குடிநீர் தட்டுப்பாடு இப்போது மிகவும் கடுமையாக இருக்கின்றது. ஏற்கனவே தூத்துக்குடி போன்ற பல ஊர்களைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகளுக்கு முன்பாக ஆய்வுப் பணம் கட்டியதற்குப் பிறகும் குடிநீர் வழங்காத நிலைமை இருக்கின்றது. எனவே, 10 வருடங்களுக்கு முன்பாக ஆய்வுப் பணம் கட்டிய பேரூராட்சிகளுக்கு இந்த வருடத்திலாவது குடிநீர் கிடைப்பதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, குடிநீர் கொடுக்கவேண்டியது இந்த அரசினுடைய முக்கியமான கடமை என்று இந்த அரசு கருதுகிறது. அதன்னியில் மத்திய அரசு கொண்டுவந்திருக்கிற 20 அம்ச திட்டத்தில் 8-வது ஐட்டம் All problem villages should be supplied with potable drinking water என்று அருமையாகத் திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்கள்.

** ** ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1983 மார்ச் 7

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு இருக்கக்கூடாது என்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, குற்றச் சாட்டு சொல்வது என்பது வேறு, நிலைமை விளக்கம் என்பது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** ** ** எல்லாம் வந்ததாக இப்போதுதான் நான் கேள்விப்பட்டேன். அது தேவையில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டுவிட்டு தவறுதலாக இருந்தால் தாங்கள் எக்ஸ்பஞ்ச் பண்ணலாம். டெல்லி என்று சொன்னவுடனே எழுந்துவிடுகிறார்கள், இந்திரா காங்கிரஸ் என்றே சொல்லக்கூடாது என்றால் என்ன அர்த்தம்..(குறுக்கீடு) ....8-வது ஐட்டத்தில் குடிதண்ணீர் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. 20 அம்ச திட்டத்தைச் செயல் படுத்த முழுமையாக இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. இன்னும் பல செய்யும். அப்படி இருக்கும்போது 170 கோடி ரூபாய் திட்டத்திற்கு வேண்டும். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் பிரச்சினைக்குரிய தண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க 170 கோடி ரூபாய் வேண்டும். இதிலே எல்லாமே மாநில அரசு செய்துவிட முடியாது. பட்ஜெட்டிலே கூட பார்த்திருப்பீர்கள், இந்த ஆண்டு 43 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டுக்கு 60 கோடி தருகிறேன் என்று கூறி இருக்கிறார்கள்.. நாவலரிடமிருந்து பணம் வாங்குவது அவ்வளவு சுலபம் அல்ல.. (சிரிப்பு)......சிரமப்பட்டுத்தான் பணம் வாங்குகிறோம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சருக்கு இருக்கின்ற சிரமங்கள் பூராவும் சபைக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லை. கேட்கப்பட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொன்னால் போதும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1983 மார்ச் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல எல்லா கிராமங்களுக்கும் உடனடியாக குடிதண்ணீர் கொடுக்க இந்த அரசு காட்டுகின்ற அக்கறையோடு மத்திய அரசு ஒத்துழைத்து நாங்கள் கேட்டிருக்கின்ற ரூ. 55 கோடி ரூபாயினை விரைவிலே கொடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது போன்று விரைவிலே அத்திட்டங்கள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது நாவலர் அவர்கள் பணம் தரமாட்டார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு கருத்து வேற்றுமை அமைச்சர்களுக்குள்ளே இருக்கின்றது என்பதை. . . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினை எப்படிக் குற்றம் சாட்டக்கூடாதோ அப்படி மாநில அமைச்சரையும் குற்றம் சாட்டக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

1981-82-ஆம் ஆண்டில் நஞ்சை நிலங்களாக மாற்றப்பட்ட புஞ்சை நிலங்கள்.

* வினா எண். 310—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1981-82-ஆம் ஆண்டில் எத்தனை ஏக்கர் புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதா? மாவட்ட வாரியாக எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1981-82-ஆம் ஆண்டில் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டத்தின் கீழ் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்படவில்லை. ஆனால் 1981-82 ஆம் ஆண்டு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்பட்டன. அவ்வாறு மாவட்டவாரியாக மாற்றப்பட்ட நிலப் பரப்புகளின் விவரங்கள் பின்வருமாறு :—

		ஏக்கர்
1	செங்கல்பட்டு மாவட்டம்	53
2	வட ஆற்காடு மாவட்டம்	401
3	தென் ஆற்காடு மாவட்டம்	5
4	திருச்சிராப்பள்ளி மாவட்டம்	1,158

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS